அரியலூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஆணை பிறப்பிப்பவர் :- திரு.மு.இராமன், எம்.எஸ்சி.,எம்.எட்.,
நி.மு.எண்.9048/அ1/2021, நாள்.22.06.2022

--------

பொருள்: தமிழ்நாடு பள்ளிக்கல்வி – அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – அரியலூர் மாவட்டம் – அரியலூர் உதவித் தொடக்கக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 06.06.2017–ல் பணி நியமனம் செய்யப்பட்டு – தற்போது பெரம்பலூர் மாவட்டம், து.களத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளியின் இளநிலை உதவியாளர் திரு.ரெ. ராஜேஷ் த/பெ திரு.ரெங்கசாமி (லேட்) என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் – சார்பு.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக்கல்வி (வ.செ–01) த்துறை நாள் : 18.05.2018.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு1)த்துறை நாள் :26.02.2021.
3. அரியலூர் மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.1244/அ1/2017, நாள்.05.06.2017.
4. பெரம்பலூர், முதன்மைக்கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண். 6788/அ1/2021, நாள். .11.2021.

---------

<u>ஆணை</u>

பார்வை(3)–ல் கண்டுள்ளவாறு, அரியலூர் மாவட்டம், அரியலூர் உதவித் தொடக்கக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக திரு.ரெ. ராஜேஷ் த/பெ திரு.ரெங்கசாமி (லேட்) என்பாருக்கு கருணை அடிப்படையின் கீழ் பணி நியமனம் வழங்கப்பெற்று 06.06.2017 முற்பகல் முதல் பணிபுரிந்த வந்த நிலையில், தற்போது பணி மாறுதல் மூலம் பெரம்பலூர் மாவட்டம், து.களத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளியின் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும், மேற்படி பணியாளருக்கு அவர்தம் இளநிலை உதவியாள பதவியில் 06.06.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரி பார்வை(4)–ல் கண்டுள்ள கடிதத்தின் வழி கருத்துருக்கள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது.

அதனடிப்படையில் பார்வை(1)(2)–ல் கண்டுள்ள அரசாணைகளின்படி, தனியர் திரு.ரெ.ராஜேஷ் என்பாருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின் தொகுதி 14–ல் வகைப்படுத்தப்பட்டுள்ள **இளநிலை உதவியாளர் பணிநிலையில்** 06.06.2017 முற்பகல் முதல் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்படுத்தி தனியருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

(த.பி.பா)

<u>நிபந்தனைகள்</u>

01. அன்னார் தமது இளநிலை உதவியாளர் பணிநிலையில், மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்தினை மேலலுவலருக்கு மனநிறைவு அளிக்கத் தக்க வகையில் முடிக்கப்படல் வேண்டும்.
02. அரசு அலுவலர்களுக்கான பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.
03. தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெறல் வேண்டும்.
04. தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது ஊதிய உயர்வு மற்றும் வருடாந்திர ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

மேற்படி பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு :- பணிவரன்முறை ஆணை அசல் - 02
(ம) அசல் பணிப்பதிவேடு-01 தொகுதி.

முதன்மைக்கல்வி அலுவலர்
அரியலூர்.

23/6/22

பெறுநர்
திரு.ரெ. ராஜேஷ்,
இளநிலை உதவியாளர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
து.களத்தூர், பெரம்பலூர் மாவட்டம். (உரிய தலைமை ஆசிரியர் மூலமாக)

நகல்
01. தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, து.களத்தூர், பெரம்பலூர் மாவட்டம்.
02. முதன்மைக்கல்வி அலுவலர், பெரம்பலூர் (ம) பெரம்பலூர் மாவட்டம்.